TNED140043772024

Presented on : 15-11-2024
Registered on : 16-11-2024
Decided on : 27-03-2026
Duration : 1 years, 4 months, 12 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண் 1. பவானி.**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 14ம் நாள்
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் நாள் திங்கட்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.531/2024**

மாநில அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
பவானி காவல் நிலையம்,
பவானி.
(குற்ற எண். 112/2024). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

சூர்யா (22/2024),
த/பெ.கண்ணன் ... எதிரி

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>பவானி காவல் நிலையம்,<br>பவானி.<br>(குற்ற எண். 112/2024). |
| 2. | எதிரியின் பெயர் | சூர்யா (22/2024),<br>த/பெ.கண்ணன் |
| 3. | எதிரியின் முகவரி | க.எண்.8/1–177 சுப்ரமணியன் நகர்,<br>புதுசம்பள்ளி, வீரக்கல்புதூர் அஞ்சல்,<br>மேட்டூர். |
| 4. | எதிரியின் வயது | 22 |
| 5. | குற்ற நிகழ்வு நாள் | 23.02.2024 |



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.27 19:03:14 +0530

<table>
<tr><td>6.</td><td>புகார் தேதி</td><td colspan="3">23.02.2024</td></tr>
<tr><td>7.</td><td>எதிரி கைது செய்யப்பட்ட தேதி</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td>8.</td><td>எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">Station Bail</td></tr>
<tr><td>9.</td><td>Commitment</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td>10.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td rowspan="7">11.</td><td rowspan="7">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>05.05.2025</td><td>05.05.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>05.05.2025</td><td>05.05.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>26.02.2026</td><td>26.02.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>24.03.2026</td><td>24.03.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>24.03.2026</td><td>24.03.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>25.03.2026</td><td>25.03.2026</td></tr>
<tr><td>12</td><td>விசாரணை முடிக்கப்பட்ட தேதி</td><td colspan="3">25.03.2026</td></tr>
<tr><td>13</td><td>தண்டனை அல்லது உத்தரவு</td><td colspan="3">27.03.2026</td></tr>
<tr><td>14.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">27.03.2026</td></tr>
<tr><td>15.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="3">அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம்</td></tr>
</table>

இவ்வழக்கு கடந்த 16.11.2024ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் திருமதி. P.கயல்விழி, கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.ராஜா அவர்களும் ஆஜராகி நடத்திட, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்



RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.27 19:03:21 +0530

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 23.02.2024ம் தேதி காலை 08.00 மணிக்கு பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, பவானியிலிருந்து மேட்டூர் சொல்லும் சாலையில், கருமகவுண்டன்புதூர் கூலிக்காரன்பாளையம், பேருந்து நிறுத்தம் அருகில் சாட்சி.2 தாண்டாயி என்பவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து கடந்தபோது, மேற்படி சாலையில், வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 52 K 5068 என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நடந்து சென்றுகொண்டிருந்த சாட்சி.2 தாண்டாயி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி விபத்தினால், சாட்சி.2 தாண்டாயி என்பவருக்கு இடது கால் மற்றும் கையின் எலும்பு முறிவு எனும் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், எனவே, எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 338ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, பவானி காவல் நிலைய, காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 338ன் கீழ் குற்றச்சாட்டின் சாராம்சத்தை கு.வி.மு.ச. பிரிவு 251ன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-**

கடந்த 23.02.2024ம் தேதி காலை 08.00 மணிக்கு பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, பவானியிலிருந்து மேட்டூர் சொல்லும் சாலையில்,



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.27 19:03:25 +0530

கருமகவுண்டன்புதூர் கூலிக்காரன்பாளையம், பேருந்து நிறுத்தம் அருகில் சாட்சி.2 தாண்டாயி என்பவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து கடந்தபோது, மேற்படி சாலையில், வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 52 K 5068 என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நடந்து சென்றுகொண்டிருந்த சாட்சி.2 தாண்டாயி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி விபத்தினால், சாட்சி.2 தாண்டாயி என்பவருக்கு இடது கால் மற்றும் கையின் எலும்பு முறிவு எனும் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார்.

4.2 கடந்த 23.02.2024–ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சித்தையசாமி என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது பவானி அரசு மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட தாண்டாயி என்பவரது Referred RTA இன்டிமேஷனை பெற்று பெருந்துறை ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கு தாண்டாயி மயக்க நிலையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததால் அவரை விசாரணை செய்ய இயலவில்லை என்றும், பின்னர் மேற்படி காயம்பட்ட தாண்டாயி என்பவரது பேரன் பிரகாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான அ.சா.ஆ.1 புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண்.112/2024, இ.த.ச பிரிவுகள் 279, 337ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற திருமதி. பகவதியம்மாள், காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான சந்தோஷ் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகசஜம், அ.சா.ஆ.4 மாதிரி வரைபடமும் தயார் செய்தும், பின்னர் சாட்சிகள் பிரகாஷ், தாண்டாயி, சின்ராசு, மோகன்ராஜ் மற்றும் சந்தோஷ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார்.

4.3 பின்னர், 01.03.2024ம் தேதியன்று நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி சூர்யா என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்க நிலைய பிணையில் விடுவித்தும், பின்னர் விபத்தில் தொடர்புடைய



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.27 19:03:28 +0530

வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தும், 08.05.2024ம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ரவிக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.5 TN 52 K 5068 என்ற BAJAJ CT 100 பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றும், சாட்சி தாண்டாயி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சந்தோஷ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.6 காயச்சான்று பெற்றும், மருத்துவர் தாண்டாயிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் இ.த.ச பிரிவுகள் 279, 337இருந்து இ.த.ச பிரிவுகள் 279, 338 ஆக மாறுதல் செய்து அ.சா.ஆ.7 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், பின்னர், தனது புலன் விசாரணையை முடித்து கடந்த 08.05.2024ம் தேதியன்று எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 கீழ் இறுதி அறிக்கையை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரியை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார். எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 279, 338ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **தீர்வு**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், கடந்த 23.02.2024ம் தேதி காலை 08.00 மணிக்கு பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, பவானியிலிருந்து மேட்டூர் சொல்லும் சாலையில், கருமகவுண்டன்புதூர் கூலிக்காரன்பாளையம், பேருந்து நிறுத்தம் அருகில் சாட்சி.2 தாண்டாயி என்பவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து கடந்தபோது, மேற்படி சாலையில், வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 52 K 5068



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.27 19:03:31 +0530

என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நடந்து சென்றுகொண்டிருந்த சாட்சி.2 தாண்டாயி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி விபத்தினால், சாட்சி.2 தாண்டாயி என்பவருக்கு இடது கால் மற்றும் கையின் எலும்பு முறிவு எனும் கொடுங்காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.

8. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து நடைபெறவில்லை என்றும், இவ்வழக்கில் அ.சா.3 சாலையில் வரும் வாகனத்தை கவனிக்காமல் நடந்து சென்றதால் மேற்படி விபத்து நடைபெற்றது என்றும், எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து ஏற்பட்டதாக சாட்சிகள் குறிப்பிட்டு சாட்சியமளிக்காத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

9. இவ்வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனம் அடையாளப்படுத்தப்படும், இரண்டாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரி தான் அதிவேகமாகவும், அல்லது கவனக்குறைவாகவும் ஓட்டினார் என்றும், மூன்றாவதாக எதிரி வாகனத்தை அவ்வாறு ஓட்டி கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும்.

10. இவ்வழக்கில் அ.சா.1 பிரகாஷ் புகார்தாரராகவும், அ.சா.2 மோகன்ராஜ், அ.சா.5 சந்தோஷ் ஆகியோர் பார்வை மகஜர் சாட்சிகளாகவும், அ.சா.3 தாண்டாயி பாதிக்கப்பட்ட சாட்சியாகவும், அ.சா.4 சின்ராசு கண்ணுற்ற சாட்சியாகவும், அ.சா.6 பகவதியம்மாள்புலன் விசாரணை அதிகாரியாக முன்னிலைபடுத்தப்பட்டுளனர்.

**11. இ.த.ச பிரிவு 279கீழ்கண்டவாறு கூறிகிறது.**

பொது பாதையில் முரட்டுத்தனமாக ஓட்டுதல் அல்லது சவாரி செய்தல், மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமான அல்லது வேறு எவருக்கேனும் காயம்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.27 19:03:35 +0530

அல்லது கேடு விளைவிக்கக்கூடிய அத்தகைய வகையிலும் பொதுப்பாதை ஏதோவொன்றிலும் வண்டி எதையும் முரட்டுத்தனமாக அல்லது கவனக்குறைவாக ஓட்டுகிற அல்லது சவாரி செய்கிற எவறாயினும் 6 மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஓர் ஆயிரம் வரை நீடிக்கக்கூடிய அபராதமும் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப் படவேண்டும்.

11.1 மேற்படி பிரிவின்படிக்கு முதலாவது உட்கூறான பொதுப்பாதை மற்றும் இரண்டாவது உட்கூறான ஆஜர் எதிரிதான் வாகனத்தை இயக்கினாரா என்பதை பொறுத்து இருதரப்பிலும் எந்தவித ஐயப்பாடும் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.2 மேற்படி பிரிவின்படிக்கு மூன்றாவது உட்கூறான எதிரி அசட்டுத்தனமான தகாதுணிச்சல் அல்லது கவனக்குறைவாக அவரது இருசக்கர வாகனத்தை இயக்கி அ.சா.3 தாண்டாயி என்பவருக்கு கொடுங்கயாத்தை ஏற்படுத்தினாரா என்று பரிசிலனை செய்கையில், அ.சா.3 தாண்டாயி தனத சாட்சியத்தில், கடந்த 1 – 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 09.00 மணிக்கு தான் கரும்பக்கவுண்டன் புதூரில் உள்ள மேட்டூர் செல்லும் சாலையில் நின்று கொண்டிருந்தபோது, ஒரு வண்டி தன் மீது வந்து மோதியதில், தான் கீழே விழுந்து அடிப்பட்டு விட்டதாகவும், பின்னர் என்ன நடந்தது என்று தனக்கு எதுவும் தெரியவில்லை என்றும், அந்த விபத்தில் தனக்கு இடது கால், இடது கை மற்றும் வயிறு ஆகிய இடங்களில் அடிபட்டதாகவும் என்று அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

11.3 இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 சின்ரசு தனது சாட்சியத்தில், தான் கூலிக்காரன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்தபோது, அங்கு கூட்டமாக இருந்ததாகவும், அருகில் சென்று விசாரித்தபோது, வயதான பாட்டி ஒருவர் ரோட்டை கடக்கும்போது, பைக் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியதாகவும், தான் விபத்தை நேரில் பார்க்கவிலலை என்று அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.27 19:03:39 +0530

11.4 வழக்கிற்கு அடிப்படையான புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில், புகாரானது விபத்து நடைபெற்ற அன்றே கொடுக்கப்பட்டுள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், புகாரின் அடிப்படையில் 23.02.2024ம் தேதி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 26.02.2024ம் தேதிதான் இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. மேற்படி 3 நாட்கள் காலதாமதத்திற்கு அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் கொடுக்கவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. புகாரானது சொன்ன தேதியில் நேரத்தில் பதிவு செய்யப்பட்டதா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது.

11.5 அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், இறந்துபோன நபரின் பேரனான அ.சா.1 பிரகாஷ் தனது சாட்சியத்தில், விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்து தான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.1 கேள்விநிலை சாட்சியம் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.6 மேலும், பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.3 மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 ஆகியோர் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர். அரசு தரப்பில் இந்நீதிமன்ற அனுமதியுடன் குறுக்குவிசாரணை செய்தும், அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

11.7 மேற்படி அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளை பரிசீலனையில் செய்கையில் அ.சா.1ன் சாட்சியம் கேள்வி நிலை சாட்சியம் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.3 அரசு தரப்பிற்கு எதிரிாக சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பு வழக்கை பெருத்த சந்தேகத்திற்கு உண்டாக்கிறது. மேலும் அரசு தரப்பு சாட்சிகள் எதிரியின் அசட்டுத்தனமான தகா துணிச்சசல், கவனக்குறைவு எனக் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும், சாதாரண மனிதன் கூறுவது போல் எதிரிதியின்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.27 19:03:42 +0530

அஜாக்கிரதை அசட்டுத்தனமாக தகா துணிச்சல் சொன்னாலே போதும் ஆனால் அரசு தரப்பு சாட்சிகள் அவ்வாறு எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.8 மேலும், இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.2 பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், அவரது குறுக்கு விசாரணையில், தான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தனக்கு தெரியாது என்று கூறியுள்ளார். மேலும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 தான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்று அரசு தரப்பிற்கு எதிராக சாட்சிமயளித்துள்ளார். அரசுத்தரப்பில் அ.சா.5யை இந்நீதிமன்ற அனுமதியுடன் குறுக்குவிசாரணை செய்தும், அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

11.9 ஆகவே, மேற்படி சாட்சியங்களிலிருந்து பார்வை மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதா என இந்நீதுமன்றத்திற்க்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும், மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவின் பால் கடை, ராஜேந்திரன் டீ கடை, அப்புசாமி மாவு மில், சேகர் தகர சீட் வீடு, ஜெயமணி மளிகை கடை போன்றவை சம்பவயிடத்தில் உள்ள சாட்சிகளை விசாரிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.10 மேலும், விபத்து ஏற்படுத்திய வாகனமானது 06.03.2024ம் தேதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்பது அ.சா.ஆ.5 பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.11 மாண்புமிகு உச்சநீதிமன்றம் Ravi kapur VS State of Rajasthan எனும் வழக்கில் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஒட்டுதல் நேரடியான சாட்சியம் அல்லது சுற்றியுள்ள சூழ்நிலைகள் மற்றும் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஓட்டுதல் அனுமானம் ஆகியவற்றின் மூலம் நிரூபணம் செய்யப்படலாம் மேலும் சுற்றியுள்ள சூழ்நிலைகள் மூலம் வழக்கானது நிரூபணம்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.27 19:03:45 +0530

செய்யப்படும் நிலையில் செயலே செப்பும் (Doctrine of res ipsa loquittur) என்ற முது மொழியும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி பரிசீலனையின் அடிப்படையில், அரசு தரப்பில் எதிரியின் அசட்டுத்தன்மாக தகா துணிச்சல், அஜாக்கிரதையின் காரணமாக விபத்து ஏற்பட்டது என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், செயலே செப்பும் என்கிற விதிப்படியும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு கண்டு எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவு 279ன் படியாக உட்கூறு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.

**12. இ.த.ச. பிரிவு 338 கீழ்கண்டவாறு கூறுகிறது.**

மனித உயிருக்கு அல்லது மற்றவர்களின் உடற் பாதுகாப்பிற்கு அபாயம் ஏற்படும் அளவிற்கு கவனக்குறைவாக அல்லது முரட்டுத்தனமாக எந்த செய்கையேனும் செய்வதன் மூலம் எவருக்கேனும் கொடுங்காயம் விளைவிக்கிற எவரொருவரும் 2 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவு சிறைதண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஓராயிரம் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

12.1 மேற்படி பிரிவின்படி எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் அ.சா.3 தாண்டாயி என்பவருக்கு எதிரி கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் நிரூபித்தல் வேண்டும். இந்நிலையில் அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், மேற்படி அ.சா.3க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது அ.சா.ஆ.6 மூலம் அரசுதரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இ.த.ச பிரிவு 279ன் கீழ் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் அ.சா.3க்கு ஏற்பட்ட காயமானது எதிரியின் அசட்டுத்தனமான தகாதுணிச்சல் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது என தீர்மானிக்க இயலாது. எனவே, எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவு 338ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே முடிவு செய்யப்படுகின்றது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.27 19:03:49 +0530

13. முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் எந்தவிதமான ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாத நிலையில் எழும் ஐயத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இ.த.ச.பிரிவுகள் **279, 338ன்** கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து **கு.வி.மு.ச.பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை** செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

14. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.27 19:03:53 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**

<u>இணைப்பு:</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.பிரகாஷ். |
| அ.சா.2 | திரு.மோகன்ராஜ். |
| அ.சா.3 | திருமதி.தாண்டாயி. |
| அ.சா.4 | திரு.சின்ராசு. |
| அ.சா.5 | திரு.சந்தோஷ். |
| அ.சா.6 | திருமதி.பகவதியம்மாள், காவல் உதவி ஆய்வாளர். |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23.02.2024 | புகார் மனு. |
| அ.சா.ஆ.2 | 23.02.2024 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.3 | 23.02.2024 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.4 | 23.02.2024 | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ.5 | 06.03.2024 | TN 52 K 5068 என்ற BAJAJ CT 100 பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை. |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | 23.02.2024 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |
| அ.சா.ஆ.7 | 08.05.2024 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. |

அரசு தரப்பு சான்றுபொருட்கள்: – இல்லை –

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:– – இல்லை –

குறிப்பு:

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.27 19:04:09 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**